# யாழ் குடாவில் ஆயுதப் படையினர் காரணமாக இடம்பெயர்ந்தவர்களின் விபரங்கள் சேகரிப்பு!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

[illegible] 2 4-11-85 திங்கட்கிழமை (ஐப்பசி 19 ஸபர் 20) முழக்கம் 270

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயுதப் படையினர் மேற்கொண்ட பல வேறு நடவடிக்கைகள் காரணமாக, தமது சொந்த வீடுகளைவிட்டு வெளியேறி, வேறு இடங்களில் குடியேறியுள்ளவர்கள் பற்றிய பூரண பட்டியலொன்றைத் தயாரிக்கும் வேலையில் யாழ்ப்பாண அரச செயலகம் இப்போது ஈடுபட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு யாழ். மாவட்டத்தின் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமம் கிராமமாக இப் பட்டியல் தயாரிக்கப்படவேண்டுமென உதவி அரசாங்க அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஆயுதப் படையினரின் முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டமை, ஆயுதப்படையினர் தமக்கு அயலிலுள்ள பொதுமக்களை அங்கிருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொண்டமை, ஆயுதப்படையினரின் பயமுறுத்தல் ஆகிய மூன்று காரணங்களுக்காகத் தமது வீடுகளை விட்டு வெளியேறியவர்கள் பற்றிய பூரண விபரங்களைச் சேகரித்தபின் கோர்வைப்படுத்தவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்தவர்கள் தற்போது வசிக்கும் இடம், அவர்கள் நிலவரம் பற்றியும் விபரங்கள் பெறப்படும்.

★ நேற்றுமுன்தினமிரவு 40 நிமிடங்கள் சந்தித்துப் பேசினர்

# ராஜீவும் பண்டாரியும் தமிழர் பிரச்சினை பற்றி கூடி ஆலோசனை

## தூதுவர் டிக்ஸிற் டில்லி அழைக்கப்படலாம் வார இறுதிக்குள் மீண்டும் பேச்சுவார்த்தை

(புதுடில்லி)

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும், பாரத வெளியுறவுச் செயலரும் இலங்கை இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தையின் விசேட தூதுவருமான திரு. ரமேஷ் பண்டாரியும் நேற்று முன்தினமிரவு தனிமையில் சந்தித்து இலங்கையின் இனப்பிரச்சினை நிலைமை தொடர்பாக அந்தரங்க ஆலோசனை நடத்தியதாக தெரியவந்துள்ளது.

உதவியாளர்கள் எவருமின்றி சுமார் நாற்பது நிமிடங்கள் இவர்கள் இருவரும் தற்போதைய நிலைமைபற்றி மிக நுணுக்கமாக ஆராய்ந்ததாக டில்லிப் பத்திரிகைகள் அறிவித்துள்ளன.

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு அமுலுக்குவந்த பின்னர் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்ற அத்துமீறல் சம்பவங்கள் பற்றிய அறிக்கையொன்று இவர்களது ஆலோசனையின்போது பரிசீலனை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள தமிழீழக் குழுக்களுடன் திரு. பண்டாரி

—6ஆம் பக்கம் பார்க்க

**சனி மாற்ற ராசி பலன் 4ம் பக்கத்தில்**

## இந்தியாவுள் நுழைய முயன்ற 25 பாகிஸ்தானியர் கைது!

(புதுடில்லி)

இந்தியாவிற்குள் கள்ளமாக அத்துமீறி நுழைய முயன்ற இருபத்தைந்து பாகிஸ்தானியர்களை, இந்திய கடற்படையினரும் பொலிஸாரும் கூட்டாகச் சேர்ந்து கைது செய்துள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த இரண்டு வள்ளங்களும் கைப்பற்றப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

குஜராத் மாநில எல்லைக் கரையில் வைத்து இவர்கள் கைதானதாக பி ரி. ஐ. அறி

...6ம் பக்கம் பார்க்க

இன்று காலை 9-30க்கு விசாரணை ஆரம்பம்

## சம்பவ இடங்களையும் குழு பார்வையிடும்

இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று காலை யாழ்ப்பாணம் வரும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது விசாரணைகளை காலை 9–30 மணிக்கு ஆரம்பிக்கும்!

குழு உறுப்பினர்களில் ஒருவரான இலங்கையின் முன்னுள் இந்தியத் தூதுவரான திரு. ரி. பி. பானபொக்கே அல்லது மற்றொரு குழு உறுப்பினரான ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான முன்னுள் பிர

—6ஆம் பக்கம் பார்க்க

## யாழ்நகரில் ராணுவ ரோந்து மீண்டும் சகஜமாகி வருகின்றது

யாழ்ப்பாண நகரில் ஆயுதம் தாங்கிய ராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி வருகின்றது.

கடந்த புதன்கிழமை இரவு நகருக்குள் நுழைந்து பெரும் பரபரப்பை உண்டு பண்ணிய ராணுவத்தினர், மூன்று நாள் விடுமுறைக்குப் பின்னர் நேற்றுப் பிற்பகல் நகரில் வலம் வந்தனர்.

நான்கு கவச வண்டிகளில் பஸ் நிலையப் பகுதியை இரு தடவைகள் இவர்கள் சுற்றி வந்தபோது, அங்கு நின்ற பொதுமக்கள் கடைகளுக்குள் நுழைவதும், பஸ்கள், வான்களுக்குள் ஏறுவதும், ஒழுங்கைகளுக்குள் ஓடி மறைவதுமாகக் காணப்பட்டனர்.

தீபாவளிப் பண்டிகை வர்த்தகம் காரணமாக இப்போது பல்லாயிரக் கணக்கான மக்கள் நகரில் நடமாடிவருவது குறிப்பிடத்தக்கது.

ராணுவத்தினர் நகரில்

—6ஆம் பக்கம் பார்க்க

மல்லாவி வைத்தியசாலை

## 'அம்புலன்ஸ்' மருந்துகளுடன் வவுனியாவில் கடத்தப்பட்டது

மல்லாவி அரசினர் வைத்தியசாலைக்குச் சொந்தமான ''அம்புலன்ஸ்'' வாகனத்தை வைத்தியசாலைக்குத் தேவையான அத்தியாவசிய மருந்து வகைகளுடன் வவுனியாவில் வைத்து இனந் தெரியாத இரு நபர்கள் ஆயுத முனையில் கடத்திச் சென்றுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மேற்குப் பிராந்தியத்தின் மிகப் பின் தங்கிய, வைத்திய வசதி

—6ஆம் பக்கம் பார்க்க

கூட்டணி அரசியல் குழு நேற்றுக் கூடியது

## லண்டன் விஜயம் பற்றி அமிர் விளக்கினர் ஆயுதப்படை அட்டூழியத்திற்குக் கண்டனம்

(சென்னை)

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அமுல் செய்வதாகக் கூறிக் கொண்டு, இலங்கை அரசாங்கம் தனது ஆயுதப் படைகளைக் கட்டுப்படுத்தாது வைத்திருப்பதற்குசென்னையில் நேற்றுக்கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழுக் கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய வடக்குக் கிழக்கு மாகாணங்களின் சூழ்நிலைகள் பற்றி ஆராய்வதற்காக நேற்றைய கூட்டம் அவசரமாகக் கூட்டப்பட்டது.

ஆயுதப்படையினர் தொடர்ச்சியாக அப்பாவித் தமிழர்களைக் கொலை செய்து வருவது பற்றிய புள்ளிவிபரங்கள் இங்கு முன்வைக்கப்பட்டது.

கடந்த இரு வாரமாக லண்டனில் அரசியல் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், அங்கு பல்வேறு அரசியல் தலைவர்களுடனும், அமைப்புகளின் பிரதிநிதிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகள், ஆலோசனைகள் பற்றி இங்கு எடுத்து விளக்கினர். கூட்டம் மீண்டும் நாளை நடைபெறும்.

## மக்கள் வங்கி மறியல் ஒத்திவைப்பு

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளுக்கு முன்னல் இன்று

...6ம் பக்கம் பார்க்க

## மாவைக் கந்தனுக்கு புதிய 54அடி உயர மணிக்கோபுரம்

வரலாற்றுப் பெருமைமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் ஆயிரத்து இருநூறு இருத்தல் நிறைகொண்ட பெரிய வெண்கல அசையா மணி ஐம்பத்தி நான்கு அடி உயரமான மணிக் கோபுரத்தில் பிரதிஷ்டை பண்ணுவதற்கான ஆயத்தங்கள் இப்போது நடைபெற்று வருகின்றது.

—6ஆம் பக்கம் பார்க்க

## 17 பேர் கைது

மட்டக்களப்புப் பகுதியில் சந்தேகத்தின் பேரில் பதினேழு தமிழர்களை ஆயுதப் படையினர் கைதுசெய்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

# தம் பதவியை சமூக சேவைக்கு அர்ப்பணித்தவர் இந்திராணி

பிறந்தவர்கள் எல்லோரும் என்றோ ஒருநாள் இறப்பது திண்ணம் என்றாலுங்கூட, ஒரு சிலரின் மறைவு நிலையான தாக்கத்தினை எம்மனதில் ஏற்படுத்தி விடுகிறது.

அவ்வாறு எமது மனதில் அழியாத இடம் பெறுபவர்கள் எல்லோரும் உயர்ந்த அந்தஸ்திலேயோ அல்லது உயர்ந்த பதவியிலேயோ இருக்க வேண்டுமென்பதுகூட நியதியில்லை. சாதாரண நிலையிலுள்ளவர்கள்கூட, தமது பண்பிலும், சமுதாயத்திற்குத் தாம் செய்யும் சேவையினலும் மக்களின் மனதில் இடம் பெற்றுவிடுகிறார்கள்.

அந்த வரிசையில் குறிப்பிடப்பட வேண்டியவர் திருமதி. இந்திராணி மாணிக்கவாசகர் அவர்கள். இவர் கரணவாய் வடக்கு கிராமசேவை உத்தியோகத்தர் திரு பெ. மாணிக்கவாசகரின் பாரியாராவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகிய இவர் 1972ம் ஆண்டு தொடக்கம் கட்டைவேலி. நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியின் முகாமையாளராகவும், சந்தைப்படுத்தும் முகாமையாளராகவும் கடமையாற்றியதுடன், 1977ம் ஆண்டு தொடக்கம் 1978ம் ஆண்டுவரை பொது முகாமையாளராகவும், பின்னர் 1985ம் ஆண்டுவரை கிராமிய வங்கியின் முகாமையாளராகவும், பதில் பொது முகாமையாளராகவும் கடமையாற்றியவர்.

அண்மைக்காலத்தில் மற்றைய வங்கிகள் செயலிழந்து போயிருந்த கட்டத்திலெல்லாம் கட்டைவேலி கரவெட்டிப் பகுதிவாழ் மக்களுக்குத் தமது வங்கிமூலம் இளைப்பாற்று வேதனம் வழங்கிச் சேவையாற்றிய பெருமை இவருக்குண்டு. அதேபோன்று இப்பகுதியிலுள்ள அரசாங்க நிறுவனங்களைச் சார்ந்த ஊழியர்களுக்கெல்லாம் தமது வங்கியினூடாக வேதனம் வழங்க ஏற்பாடு செய்து அரியசேவையாற்றினர்.



காலம் சென்ற இந்திராணி நேர்மையானவர். கடமையில் கண்ணும் கருத்தும் கொண்டவர். கொண்ட கொள்கையிலிருந்து தவறாதவர். இரக்க சிந்தையுடன் பிறர் கஷ்டங்களை அணுகுபவர்.

கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியே யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிக தொகையினருக்கு இளைப்பாற்றுச் சம்பளம் வழங்கியதென்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய தொன்றாகும். அதற்கு வழி சமைத்தவர் காலஞ்சென்ற இந்திராணி என்றால் அதுமிகையாகாது. இவ்வாறு தமது பதவியைச் சமூக சேவைக்கு அர்ப்பணித்துக் கடமையாற்றிய திருமதி இந்திராணி மாணிக்கவாசகரை மக்கள் என்றென்றும் நினைவில் வைத்திருப்பார்கள் என்பது உறுதி.

எம். பஞ்சலிங்கம்
யாழ். அரசாங்க அதிபர்.

## அவசர அறிவித்தல்

ஈராக் விசாவுக்காக விண்ணப்பித்திருந்தவர்கள் பெயர்களை சென்ற மாதம் 28ம், 29ம்திகதி பத்திரிகையில் பிரசுரித்திருந்தேன். அந்தப் பட்டியலில் பெயரை பெற்றிருப்பவர்கள் உடனடியாகவே பிரயாணத்தைமேற்கொள்வதற்காக 3ம், 4ம், 5ம், திகதியில் வந்து என்னை நேரடியாகச் சந்திக்கவும். புதியவர்களும் 6-ம் திகதிக்கு முன்பு வந்து பாஸ்போர்ட்டுடன் தொடர்பு கொள்ளவும்

அ மகேந்திரன்
155, குருசோ வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை

வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை அவர்கள் காலமானார். அன்னார் சங்கரப்பிள்ளை ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சோமசுந்தரம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) பிரபல வர்த்தகர் ஆறுமுகம் (ஆறுமுகம் அன்சன்ஸ் பரந்தன்), பிரபல வர்த்தகர் நடராசா (பரந்தன்), மயில்வாகனம் (உதவி வைத்திய அதிகாரி காரைநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பரமேஸ்வரி சோமசுந்தரம், திருமதி சுந்தரம்மா ஆறுமுகம், திருமதி செல்லம்மா நடராசா, திருமதி மனோன்மணி மயில்வாகனம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவலோகநாதன், கணேசபிள்ளை, ஸ்கந்தராசா, சரோஜினிதேவி, சிவஞானசுந்தரம், கனகசுந்தரம் திருமதி சந்திரமலர் சூரியமூர்த்தி, சத்தியபாமா, ரஞ்சினிதேவி, வில்வராசா, நவரத்தினராசா, பாலாம்பிகை கிருபாகரன், சுதாகரன் ஆகியோரின் பேத்தியும், சிவப்பிரியா, சிவதீபன் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரது ஈமைக்கிரிகைகள் காரைநகர் பாலாவோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தில்லைமயானத்தில் தகனக் கிரிகைகள் நேற்று (03-11 85) நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## தென்னங் கன்று விநியோகம்

(கொடிகாமம்)

தென்மராட்சிப் பகுதிக்கென கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவை மன்ற நாற்று மேடையில் இருந்து கொண்டு வரப்பட்ட நல்லரக தென்னம் பிள்ளைகள் தற்பொழுது சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் விநியோகிக்கப் படுகின்றன.

## யாழ்ப்பாண பல்கலைக்கழக

# மருத்துவபீட கட்டடம் பற்றி ஒப்பந்தக்காரரின் விளக்கம்

பல்கலைக்கழக மருத்துவபீட கட்டிட வேலை தொடர்பாக முதலாம் ஆண்டு மருத்துவ பீட மாணவர்கள் அறிக்கை தொடர்பாக கட்டட ஒப்பந்தக்காரர் ஆகிய மனோகரன் & வெற்றிவேலு ஸ்தாபனம் விடுத்துள்ள விளக்க அறிக்கை வருமாறு:-

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட கட்டடத்திற்கு மட்டுமே முதலில் ஒப்பந்தம்செய்யப்பட்டிருந்தோம். ஆயினும் கைதடியில் உள்ள முன்னைய மருத்துவ பீடத்தில் வசதியீனம் காரணமாக நிர்வாகத்தினதும் மருத்துவ பீடத்தினதும் வேண்டுகோளை ஏற்று ஒப்பந்த காலத்திற்கு வெகுமுன்னரே மருத்துவ பீடத்தின் அடித்தளம் முழுவதையும் மருத்துவபீட பாவனைக்கு கொடுத்திருந்தோம். கீழ் தளத்தை பயன்படுத்தக்கூடியதாக இருப்பதற்காக எமது ஒப்பந்தத்தில் இல்லாத பல இலட்சக்கணக்கான மேலதிக வேலைகளை எமது ஸ்தாபனம் நிர்வாகத்தினதும் மருத்துவ பீடத்தினதும் அவசர வேண்டுகோளின் பெயரில் செய்தது.

மருத்துவ பீடத்தின் வேண்டுகோளின் பேரில் கட்டட அமைப்பில் பல மாற்றங்களையும் செய்து முடித்தது. ஆனால் இவ்வேலைகளுக்கு எமது கூலியை நிர்ணயித்து பணம் கொடுப்பனவு செய்வதில், பல ஸ்தாபனங்கள், குறிப்பாக கட்டட கலைஞர் ஸ்தாபனம், கட்டட திணைக்களம், பல்கலைக்கழக உயர்மானிய தொழில் நுட்பக்குழு ஆகியவை சம்பந்தப்பட்டதால், அதாவது பல உத்தியோக வழிமுறைகளால் பல வருடங்கள் தாமதித்தது இக்குறிப்பிட்ட உத்தியோக வழிமுறைகளில் இருந்து எமது கூலியை நிர்னயிர்ப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகமும் நாமும் மிகவும் முயற்சி எடுத்தும் இத்தாமதம் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. மேலும் பொருட்கள் விலை ஏற்றத்தால் ஏற்பட்ட விலை வித்தியாச மதிப்பீடுகளை நிர்ணயிப்பதிலும் தாமதம் ஏற்பட்டது.

இவற்றினால் தாமதம் அடைந்த கட்டட வேலைகள் பின்னர் நாட்டில் இடம்பெற்றநெருக்கடிகளால் மேலும் தாமதம் ஆகின. ஆயினும் சென்ற யூன் மாதக்கடைசியில் இரு பகுதியினருக்கும் ஏற்பட்ட இணக்கம் காணும் பேச்சுவார்த்தையின் பின் நாட்டில் உள்ள நிலைமை சீரடைந்து வரும் வேளையில் எமது ஸ்தாபனம் யூலை மாதத்தில் நிகழ்ச்சி திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தது. அதன்படி 1986ம் ஆண்டு பங்குனி மாதக் கடைசியில் மருத்துவப்பீட கட்டடத்தை முடித்துக் கொடுப்பதென்றும், அதற்குமேற்குறிப்பிட்ட ஸ்தாபனங்களின் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டுமென்றும் இணக்கம் காணப்பட்டது.

கடந்த மூன்று மாதங்களிலும் கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற்றது. கடந்த 30-ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற பல்கலைக்கழக நிர்வாகம், மருத்துவபீட மாணவர் தலைமைப்பீடம், மருத்துவபீட அதிபதி, கட்டடக் கலைஞர்கள், கட்டிடத் திணைக்களம், ஒப்பந்தகாரர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்ட கூட்டத்தில் தற்போது நடக்கும்வேகத்தில்கட்டடம்1986ம் ஆண்டு பங்குனி மாதத்தில் முடிவடையும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. ஆயினும் மாணவர் தலைவர்கள் இப்போது உள்ள சூழ்நிலையை கருதி எதிர்வரும் காலத்தில் சில வேலை நாட்கள் சந்தர்ப்ப சூழ்நிலையால் தடை ஏற்பட்டாலும், அவற்றை கருத்தில் கொண்டு வேலை ஆட்களை கட்டட கலைஞரின் ஆலோசனையின் பேரில் தேவையான சந்தர்ப்பங்களில் கூட்டி இரவு வேலைகளும் தேவைப்படும் போது செய்யும்படியும் கேட்டுக் கொண்டனர்.

எமது ஸ்தாபனம் அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டது. இக்கூட்டம் நடந்து முடிந்த பின் மருத்துவ பீட மாணவ தலைவர்கள் வெளியில் மறியல் செய்த மாணவர்களுடன் கூட்ட முடிவுகளை விளங்கபடுத்தி சில விளக்கங்களை நிர்வாகத்துடனும், எம்முடனும் தொடர்பு கொண்டு விளங்கப்படுத்தி மாணவர்களை அமைதியாக கலைந்து செல்ல ஏற்பாடு செய்தனர் என்று இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




✱ காத்தான்குடி இஸ்மாயில் ஹதீஜா தம்பதியின் மகள் நஸ்மியாபானு இன்று தன் ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கோப்பாய் வடக்கு உதயகுமார் தர்சினி தம்பதியின் மகள் றம்யா இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ திருக்கேதீஸ்வரம் கெந்தீஸ்வரன் - ஜெயலட்சுமி தம்பதியின் மகள் இந்து பிரியதர்ஷினி இன்று தன் இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ அரியாலை செல்வராஜா சுகிர்தா தம்பதியின் மகள் வத்சலா இன்று தன் மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ மிருசுவில், ஜெயசிங்கம் ருஜினி தம்பதியின் மகன் அல்வின் ஜெகான் இன்று தனது ஏழாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

✱ யாழ்ப்பாணம், ஸ்ரான்லி கல்லூரி லேனைச் சேர்ந்த செல்லத்துரை யோகரட்ணம் தம்பதியின் மகள் செல்வராணி இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ சாவகச்சேரி சரசாலையைச் சேர்ந்த குமாரசாமி புஷ்பலீலா தம்பதியின் மகன் நந்தகுமார் இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.


## வரி விளம்பரம்

### கல்வி

G. C. E. (சா. த) கணிதம் யாழ். முன்னணிக் கல்லூரி ஆசிரியர்கள் தயாரித்த பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் நான்கினைக் கொண்ட தொகுதி. பாடசாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் பயிற்சிப் பரீட்சைகளுக்கு உகந்த வினாத்தாள்கள். பல பிரதிகள் வாங்குவோருக்குச் சலுகை விலை தொகுதி ஒன்றுக்கு ரூபா 4, சு. இராஜநாயகம், 784, பலாலி வீதி, திருநெல்வேலி.

### திருமண சேவை

மணமகள் மணமகன் தேவையானோர் ஜாதகங்கள் சரியான முறையில் திரு. மு. நாகலிங்கம் சோதிடர் அவர்களால் பார்த்து சகல ஒழுங்கும் செய்து கொடுக்கப்படும்.
சிவகுரு மனோகரன், கலியாணக் கந்தோர், சிவன்கோவிலடி, சாவகச்சேரி.


## காணவில்லை

குரும்பசிட்டி, வவுணத்தம்பை வீதி, தர்மலிங்கம் இந்திராணி அல்லது இந்து (13 வயது) தனது தம்பியார் சர்வேஸ்வரன் (7 வயது) என்பவருடன் 29-10-85 மாலை 4 மணியிலிருந்து காணாமல் போய்விட்டார்கள். விபரங்கள்:

### தர்மலிங்கம் இந்துராணி (இந்து)

$3\frac{1}{2}$ அடி உயரம், பொதுநிறம், 5ம் வகுப்பு படித்தவர், விவேகம் குறைந்தவர், கடைசியாக காணப்பட்ட போது சிகப்புப் பாவாடையும் சட்டையும் அணிந்திருந்தார்.

### தர்மலிங்கம் சர்வேஸ்வரன்

2 அடி உயரம், சிகப்பு நிறம் திக்கித் திக்கிப் பேசுவார், கடைசியாகக் காணப்பட்ட போது கருநீலக் காற்சட்டையும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தார்.

இவர்களைக் காண்பவர்கள் கீழ் வரும் விலாசத்துடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம். தகவல் தருபவர்களுக்கு எம்மாலியன்ற சன்மானம் வழங்குவதோடு நன்றியும் கடப்பாடும் உடையோம்.

வவுணத்தம்பை வீதி,
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

சி. தர்மலிங்கம்

# சட்ட விரோத மின்னிணைப்பால் நான்கு உயிர்கள் பலியாகின

## பிரஜைகள் குழு தகவல்

சண்டிலிப்பாய் கிராமத்தில் சென்ற சில நாட்களில் சட்ட விரோத மின் பாவனையால் நான்கு உயிர்கள் பலியாகியுள்ளன. சென்ற புதன்கிழமை ஐந்து பிள்ளைகளின் தந்தையான திரு. நா, கந்தசாமி என்பவர் வீதியால் செல்கையில் சட்ட விரோதமாக இணைக்கப்பட்ட மின் கம்பி அறுந்து வீழ்திருந்தமையால்மரணமானுர்.

இவ்வாறு சண்டிலிப்பாய் பிரஜைகள் குழு தமது பகுதி உதவி அரசாங்க அதிபருக்கு சட்ட விரோத மின் இணைப்பு தொடர்பாக அனுப்பி வைத்துள்ளமகஜர் ஒன்றில் குறிப்பிட்டு உள்ளனர். அநாவசியமான இத்தகைய உயிர்ப் பலிகளை தடுக்கு முகமாக சட்ட விரோத மின்னிணைப்பு கம்பிகளை உடன்அகற்ற ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் உதவி அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இரவில் விழிப்புக் குழுக்கள் வாகனங்களை தடுத்து விசாரணை

(கொடிகாமம்)

உசன் பகுதியில் புதிதாக விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இரவு 9 மணிக்கும் அதிகாலை 5 மணிக்குமிடையில் இப்பகுதியினூடு செல்லும் வாகனங்கள் யாவும் மேற்படி குழு இளைஞர்களால் மறிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பின்னரே மேற்கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

இவ்வாறு தெரிவிக்கும் துண்டுப் பிரசுரமொன்று உசன் கிராம மக்கள் என அடிக்குறியிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. தென்மராட்சி மாணவர் ஒன்றியத்தின் பணிக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ள மேற்படி பிரசுரத்தில் கெற்பெலி, விடத்தற்பளை, கரம்பகம், எழுதுமட்டுவாள், மிருசுவில், கொடிகாமம் ஆகிய அயற் கிராமங்களில் வாழும் மக்களும் தங்கள் கிராமங்களைப் பாதுகாப்பதோடு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான விழிப்புக் குழுக்கள் மிருசுவில், எழுதுமட்டுவாள், கொடிகாமம் ஆகிய பகுதிகளிலும் அமைக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

# சக்திக் கட்டுப்பாடு என்பது வினைத்திறன் அடையாளம்

## விரிவுரையாளரின் கருத்து

"இன்று மட்டுமல்ல ஆதி காலத்திலும் தமிழர் தம் வாழ்வில் சக்தியின் பின்னூட்டற் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தனர் என்பதற்கு தக்க சான்றுகள் உள்ளன. சக்திக் கட்டுப்பாடு என்பது வினைத்திறனின் அடையாளமாகும். எனவே 'நவராத்திரி' என்பது சக்தியின் பின்னூட்டற் கட்டுப்பாடு எனும்விஞ்ஞானபூர்வ கோட்பாடு நினைவு கூரப்பட்டு வழிபடும் நிகழ்ச்சியாகும்''.

இவ்வாறு கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையில் சப்தக மண்டபத்தில் விரிவுரையாளரும். ஆசிரிய மாணவரும் இணைந்து நடத்திய வாணி விழாவுக்குத் தலைமை வகித்துப்பேசிய சிரேஷ்ட விரிவுரையாளர்திரு. ஆர். துரைராஜா எம். ஏ. குறிப்பிட்டார், இவ்விழாவிலே ஓவியத்துறை விரிவுரையாளர் திரு. கே. வீரசிங்கம் 'சக்தி' எனும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

கலாசாலை அதிபர் செல்வி எம். எஸ். சின்னப்பு, எம். எஸ். ஸி. ஆசியுரை வழங்கினார்கள். ஆசிரிய மாணவரின் சங்கீதக்கச்சேரி, நடனங்கள், வில்லுப்பாட்டு போன்ற பல கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

# பயிற்சி வகுப்பு இன்றுடன் முடிவடைகிறது

(புங்குடுதீவு)

வேலணை வட்டாரப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டு, இரண்டாம் ஆண்டு, மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பொன்றுவேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை காலை ஆரம்பமானது.

இன்றுடன் இப் பயிற்சி வகுப்பு முடிவடைகிறது. வேலணை கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலைகள் அனைத்திலிருந்தும் இப் பயிற்சி வகுப்பில் ஆசிரியர்கள் பங்குகொண்டுள்ளனர்.

# பனை அபிவிருத்தி ஆராய்ச்சிகளுக்கான நிலையம் அமைக்க சபை நடவடிக்கை

## பொது முகாமையாளர் தகவல்

(மண்கும்பான்)

கைத்தொழில் உற்பத்திகளின் மூலமும், குடிசைக் கைத்தொழில் மூலமும் எமது குடும்பப் பொருளாதாரத்தையும் உணவு உற்பத்தியையும் ஈடு செய்யக்கூடியளவு மூலவளங்கள் எமது நாட்டில் நிறைந்துள்ளது, குறிப்பாக பனையின் மூலவளம் எமக்கு எந்த அளவிற்கு துணைநிற்கும் என்பதை இன்றைய கண்காட்சி எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறு காரைநகர் ஸ்ரீ நாகபூஷணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பனம் பொருள் உற்பத்திப் பயிற்சியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு மாதர் சங்கத் தலைவி திருமதி பூரணம் ஏகாதிநாதன்ஆசிரியைதலைமை தாங்கினார். இவ்வைபவத்தை உதவிஅரசாங்கஅதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம், பனை அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. சி. பாலசிங்கம், பொது முகாமையாளர் கலாநிதி.எஸ். மோகனதாஸ், தொழிலதிபர் திரு. க. கனகராசா ஆகியோர்கள் மங்கள விளக்கேற்றி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர்.

பயிற்சியாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியும் இடம் பெற்றது. பனை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களில் ஒருவரும்தொழிலதிபருமான திரு. கனகராசா திறந்துவைத்தார்

காரைநகர் யாழ்ரன்கல்லூரி அதிபர் திரு. கே. கே. நடராஜன் பேசுகையில், அறுபதுக்கு மதிகமானதொழிற் பாடசாலைகளை கல்வி இலாகா தன் பாடத்திட்டத்தில் சேர்த்துள்ள போதும் இதுவரை பனம்பொருள் கைப்பணி உற்பத்தி தொடர்பான தொழிற் பாடத்திட்டம்சேர்க்கப்படாது இருப்பது கவலைக்குரியதொன்றாகும். இதை பனை அபிவிருத்திச் சபை உடனடிக் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியது மிகஅவசியமானதொன்றாகும்.

பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் கலாநிதி. எஸ். மோகனதாஸ் பேசுகையில், கடந்தகாலங்களைவிட பனம் பொருள் கைப்பணி உற்பத்திகளுக்கும் இன்று துரித முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றது. பனை அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள பனை அபிவிருத்திச் சபை ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும் யாழ்ப்பாணப் பகுதியில் உருவாக்கி வருவதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற என்றும் தெரிவித்தார்.

காரைநகர்நல்லி"க்கச் சபையின்செயலாளர் திரு.சு.பத்மநாதன் இப்பயிற்சியில் விசேடமாகதிறமை காட்டிய பயிற்சியாளர்களுக்கும் போதனாசிரியர்களுக்கும் தமது சபையின் சார்பில் பரிசில்களையும் பாராட்டுதல்களையும் வழங்கி உரையாற்றினார்.

நாகபூஷணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா செயலாளர் செல்வி. எஸ். இராசலட்சுமி பனை அபிவிருத்திச்சபையின்உறுப்பினர் திரு. சி. பாலசிங்கம் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

பயிற்சியில் சித்தி பெற்றவர்களுக்கானசான்றிதழ்களைபனை அபிவிருத்திச் சபையின் உறுப்பினரும் தொழிலதிபருமான திருக கனகராசா வழங்கினார். மேற்படிசங்கத்தினால் போதனாசிரியருக்கானபாராட்டு வைபவமும்தனியாகநடை பெற்றது

# செய்கைக்கு ஏற்ற நிலத்தை கண்டுபிடித்தல் முதற்கடமை

## உ. விவசாய பணிப்பாளர் அறிவுரை

(சாவகச்சேரி)

"நெல் செய்கைக்கு ஏற்ற நிலத்தை முதல் கண்டுபிடித்து, பின் நல்ல விதை நெல்லைப் பெற்று அதற்குப் பசளையிடல் களைகட்டல், போன்ற செய்முறைகளை விவசாயிகள் ஏற்ற முறையில் செய்து கொண்டால் நல்ல விளைச்சலைப் பெற முடியும். இதற்கு முதலில் விவசாய நிபுணர்களிடம் தக்க ஆலோசனையைப் பெற வேண்டியது அவசியம்''

இவ்வாறு யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர், திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை மட்டுவில் பகுதி விவசாயிகள் மத்தியில் ஆலோசனை கூறினார். மட்டுவில் ஐங்கரன் சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவர் திரு. நா. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் விவசாயப் பகுதி அதிகாரிகளான திருவாளர்கள் கதிரமலை, விஜயரத்தினம், சாவகச்சேரிப்பகுதி விவசாயப் போதனாசிரியை திருமதி தனபாலசிங்கம் ஆகியோர், கலந்து கொண்டனர்.

# கற்பித்தலில் புதியஉத்திகளை ஆசிரியர் கையாளவேண்டும்

## கல்வி அதிகாரி அறிவுரை

(பண்டத்தரிப்பு)

கல்வி புகட்டலில் புதிய உத்திகளை கையாண்டு கற்போர் சுதந்திரமாகவும் விருப்புடனும் கற்கும் வகையில் ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும் சமுதாய அமைதியும், ஆசிரியர்களின் கௌரவமும் நீடித்து நிலைக்கும் வகையில் கற்பிக்கும் பணி அமைதல் வேண்டும்.

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரியில் நடைபெற்ற 1986ம் ஆண்டின் இரண்டாம் ஆண்டு மாணவர்கட்கு கற்பிக்கும் ஆசிரியர்கட்கான சேவைக்கால பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்திய கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்திலுள்ள 53 பாடசாலைகளிலிருந்தும் ஆசிரியர்கள் இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். மேற்படி ஐந்து நாள் பயிற்சி வகுப்புகட்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா தலைமைதாங்கினார்

சங்கீத கல்வி அதிகாரி திரு. சு. கணபதிப்பிள்ளை,யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தம், செல்வி. ஸ்ரீ ரஞ்சனி விசுவலிங்கம், திரு. க. நடராசா திருமதி முருகையா ஆகியோர் பயிற்சி வகுப்புக்களை நடத்தினர். பயிற்சியில் பங்கு கொண்டோர் தயாரித்த கற்பித்தல் உபகரணக் கண்காட்சியும்நடைபெற்றது. வட்டாரக் கல்வி அதிகாரி பயிற்சியில் கலந்து கொண்டவர்கட்கு சான்றிதழ்களை வழங்கினார்.


**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்**
**1986ம் ஆண்டுக்கான**
**வழங்குனர்களைப் பதிவு செய்தல்**

மராமத்துப் பகுதி வேலைகளுக்குத் தேவையான கிறசர் சல்லி வகைகள். கையினால் உடைத்த சல்லி, கண்ட கல், கிறசர் தூள், கிறவல் மக்கி, ஊரி, மண் வகைகள், சுண்ணும்பு, தேங்காய் மட்டை, கிடுகு ஆகிய பொருட்களை வழங்குவதற்குத் தகுதியுடைய வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் அனுப்பப்படும் உறையில்இடது பக்க மேல் மூலையில் "மராமத்துப் பொருட்கள் வழங்குனர் பதிவு'' எனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 15.11.1985

சீ. வி. கே, சிவஞானம்
மாநகராட்சி மன்று ஆணையாளர்.

மராமத்துப் பகுதி,
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 25-10-1985.



**ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்**

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்திற்கும், மாவட்ட வருடாந்த செயற்படு திட்டத்திற்கும் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து கீழ்க் காணும் வேலைகள் மிகவும் தரமுயர்ந்த முறையில் செய்வதற்குத் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1-1 மின்சாரம்:

1-1-1 அதிக சக்தி (High tension) வாய்ந்ததும், குறைந்த சக்தி (Low tension) வாய்ந்ததுமான மின்கம்பிகளை அமைத்தல்.
1-1-2 உள்ளக மின்கம்பி பொருத்துதல்.

1-2 சிவில் பொறியியற்றுறை:

1-2-1 கட்டடங்கள்,
1-2-2 வீதிகள்,
1-2-3 மதகுகள்,
1-2-4 சிறிய குளங்களைப் புனரமைத்தல்.
1-2-5 நீர்ப்பாசன உறுதுணை அமைப்புகளை நவீனமயப் டுத்தல்.
1-2-6 பாடசாலைக் சட்டடங்கள்.

விண்ணப்பங்கள் கீழே கையொப்பமிட்டவருக்குப் பதிவஞ்சல் மூலம் 1985-11-20 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுவதுடன் உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்'' என்ற சொற்கள் எழுதப்படல் வேண்டும். அரச திணைக்களத்துடனோ அல்லது கூட்டுத்தாபனத்துடனோ ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அத்தகைய பதிவுகள் சம்பந்தமான விபரங்களையும் செயற்றிறன் சான்றிதழ்களையும் இணைத்தல் வேண்டும். பகுதி உதவி அரசாங்க அதிபரிடமிருந்து அண்மையில் பெறப்பட்ட பெறுமதிச் சான்றிதழின் புகைப்படப் பிரதியும் இணைக்கப்படல் வேண்டும்.

1985-11-01
கச்சேரி,
முல்லைத்தீவு.

க. பொன்னம்பலம்,
முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.



வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

### உதய சிந்தனை

*நீங்காத கோபமானது இறுதியில் போரிலே கொண்டு சென்றுவிடும்: அது அழிவையே தரும்.*

—ஔவையார்.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

4-11-85 திங்கட்கிழமை (குரோதன - ஐப்பசி 19)

# வாருங்கள்; கேளுங்கள் பாருங்கள்; கூறுங்கள்!

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தமது முதலாவது வடபகுதி விஜயத்தை இன்று ஆரம்பிக்க இருப்பதாக அறிவித்துள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இக்குழு, முதல் வாரமுடிவில் பூஸா முகாமுக்குச் சென்று தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களையும், யுவதிகளையும் நேரில் பார்வையிட்டது.

இது தொடர்பாக குழுவினுல் தயாரிக்கப்பட்ட அறிக்கை, அதன் சிபார்சுகள் சகிதம் ஜனுதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தடுப்புக்காவலிலுள்ள ஆறு இளம் பெண்களையும் விடுதலை செய்யுமாறும், காவலிலுள்ளவர்களுக்குப் போதிய உணவு, உடை ஆகியவை வழங்குமாறும் இக்குழு பரிந்துரைத்துள்ளது.

குழுவின் இச் சிபார்சுகள் எந்தளவு தூரத்துக்கு பரிசீலனைக்குட்படுத்தப்படுமென்பதை வாசகர்கள் அடுத்த சில வாரங்களில் தெரிந்து கொள்ள முடியும்.

குழு உறுப்பினர்களில் நால்வர் நீதியரசர்களாதலால் தங்கள் கருத்து, அல்லது சிபார்சுக்குக் கிடைக்கப் போகும் நீதியான நடவடிக்கைகளை அவர்களும் தெரிந்து கொள்வர்.

இரண்டாவது வார இறுதியில் குழு திருமலைக்குச் சென்றது.

பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டது.

பாதிப்புக்குள்ளான மக்களைச் சந்தித்துப் பேசியது.

பயமுறுத்துவதற்காக வெடிக்கப்பட்ட குண்டின் தாக்கத்தையும் குழு அறிந்து கொண்டது.

திருமலை விஜயந்தொடர்பான அறிக்கையையும், சிபார்சையும் குழு ஜனுதிபதிக்குச் சமர்ப்பிக்கும்.

மூன்ருவது வாரக்கூட்டத்தின் முடிவில், குழுவினர் இன்று வடக்கு நோக்கி வருவது, இப்போது முக்கியமான ஒரு நிகழ்வாகவே கருதப்பட வேண்டும். இது அத்தியாவசியமான ஒரு விஜயமுமாகும்.

அரச பயங்கரவாதத்தால் மோசமாக, கொடூரமாக தாக்கப்பட்டவர்கள் வடபகுதியினர்தான்.

இங்குள்ள மொட்டையான கட்டடங்களும், கருகிய மாடிகளும், கடந்த காலங்களின் வரலாற்றுச் சின்னங்களாகும்.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னராவது அட்டூழியங்கள் நிறுத்தப்பட்டனவா?

நெடுமாறனின் தமிழில் சொல்வதனுல் இந்தக் காலப்பகுதியில் ஆயுதப்படைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. கூடுதலான அப்பாவித்தமிழர் கொல்லப்பட்டது இக்காலத்தில்தான்.

பருத்தித்துறையில் ஆயுதப்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி பருத்தித்துறை பிரஜைகள் குழுவுக்கு புகார் செய்யப்பட்டது.

தொண்டமானுறு, வல்வெட்டித்துறை முகாம்களிலுள்ள ஆயுதம் தாங்கியவர்கள் மேற்கொண்ட ஐந்து தாக்குதல்கள் பற்றி வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவுக்குப் புகார்கள் செய்யப்பட்டன.

யாழ். வீரசிங்கம் மண்டபம், தொலைதொடர்பு திணைக்களக் கட்டடம் ஆகியவைகள் மீது கோட்டைக்குள் இருக்கும் ஆயுதம் ஏந்தியவர்கள் மேற்கொண்ட தாக்குதல்கள் பற்றி யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுவிற்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மொத்தத்தில் ஆறு புகார்கள் கடந்த இரு வாரத்துக்குள் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இராணுவத்தினருக்கு எதிராக கண்காணிப்புக் குழுவுக்குக் கிடைத்துள்ளன.

இந்த நிலையில் கண்காணிப்புக் குழுவினர் நேரடி விசாரணை நடத்தும் பொருட்டு இங்கு வருகின்றனர்.

குழு உறுப்பினர்கள் தம்மை ஒரு ஆணைக்குழு என்று ஒரு போதும் எண்ணக்கூடாது.

இங்கு பொலிஸ் நிர்வாகம் முற்ருக ஸ்தம்பித்துள்ளதால் உண்மை நிலையை ஸ்தலத்தில் சென்று விசாரித்து அறிந்து அரசாங்கத்துக்குத் தெரிவிப்பது கண்காணிப்புக் குழுவின் கடமையாகும்.

இதனுலேயே கண்காணிப்புக் குழுவினரை வாருங்கள் வாருங்கள் என வரவேற்கின்ருேம்.

இங்கு, நடைபெற்றவைகளைக் கேளுங்கள்; நடந்து முடிந்த அனர்த்தங்களைப் பாருங்கள் என்று கேட்கின்ருேம்.

கண்டதையும், கேட்டதையும் உண்மை நிலை தவருது அரசுக்கு எடுத்துக் கூறுங்கள்.

இதுவொன்றே நாம் உங்களிடம் கேட்பதாகும்.

---

பன்னிரு ராசிக்காரருக்கும் பல பல மாற்றமுண்டு

# சனீஸ்வர பகவான் மாற்றம்

# என்ன செய்யப்போகிறது?

நிகழும் குரோதன வருஷம் தமிழுக்கு ஐப்பசி மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு 12 30 மணிக்கு (இன்று 4. 11. 1985) வாக்கிய பஞ்சாங்கப்படி சனீஸ்வர பகவான் துலாராசியை விட்டு நீங்கி விருச்சிக ராசியில் பிரவேசித்துள்ளார்.

**மேடராசி**யில் பிறந்தவர்களுக்கு (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு) இனி அட்டமச் சனி காலம் ஆரம்பிக்கிறது. இது இரண்டரை வருஷகாலம் இருக்கும். சனிக்கிழமைகளில் விரதமிருந்து ஆலயங்களில் நவக்கிரகங்கட்கு தத்தம் பொருளாதார வசதிக்கேற்றபடி அபிஷேக ஆராதனைகள், அர்ச்சனை வழிபாடுகள், நவக்கிரக சாந்தி போன்றன செய்துவரலாம். வசதி குறைந்தோர் நவக்கிரகங்கட்கு 9 குடம் தண்ணீர் ஊற்றுவித்து, சனீஸ்வரனுக்கு கறுப்பு நிறத்தில் சிறிய பட்டுத்துணி வாங்கிக் கொடுத்து அணிவித்து, எள் கலந்த சாதம் நிவேதனம் செய்வித்து, எள் எண்ணெய் கொளுத்தி, துளசி இலை நீல நிறப் புஷ்பம் ஆகியவற்ருல் தத்தம் பெயர் நக்ஷத்திரத்திற்கு அர்ச்சனை செய்விக்கலாம். நிவேதனம் செய்த எள் கலந்த சாதத்தை கோயிலுக்கு வெளியில் கொண்டு போய் சனி பகவானின் வாகனமாகிய காகத்திற்கு வைக்கலாம். சனிக்கிழமைகளில் கோயிலிலுள்ள ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீமஹாவிஷ்ணு மூர்த்திக்கும் துளசி இலை, நீல நிறப் புஷ்பம் ஆகியவற்ருல் அர்ச்சனை செய்விக்கலாம் ஆஞ்சனேய சுவாமிக்கும் அவரின் திருமார்பிலும் வாயிலும் வெண்ணெய் சாத்தி துளசி இலை, நீல நிறப் புஷ்பம் ஆகியவற்ருல் அர்ச்சனை செய்விக்கலாம்.

இவ்வாறெல்லாம் சனிக்கிழமைகளில் விரதமிருந்து கோளறு திருப்பதிகம், ஆஞ்சனேய சுவாமி அஷ்டகம், நவக்கிரக தோத்திரம், ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம், ஆழ்வார்கள் ஸ்ரீ மஹாவிஷ்ணு மூர்த்தியை ஏற்றிப் போற்றித் துதிசெய்து பாடிய பாடல்களை ஓதிவரலாம். வீட்டில் விரதமாக இருந்து தூய உணவு சமைத்து சுவாமி அறையில் அன்னம் படைத்து, தூப, தீப பூசை செய்து நிவேதித்து, சாப்பிட முன் சமைத்த உணவில் சிறிதளவு 3 தடவை எடுத்து சிறிய வாழை இலை அல்லது பலா இலையில் வைத்து எள்ளும் கலந்து அல்லது சிறுதுளி நல்லெண்ணெய் விட்டு காகத்திற்கு வைத்துவிட்டுச் சாப்பிடவும். சனிக்கிழமைகளில் கறுப்பு நிற பசுமாட்டிற்கும் எள்ளும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுப்பது மிக நல்லதாகும். மேடராசி நேயர்கள் ஒவ்வொரு மாதமும் இரு தடவை வரும் பூர்வபக்ஷ அபரபக்ஷ சதுர்த்தி விரத தினங்களில் விநாயகப் பெருமானுக்கு சுத்தமான அறுகம் புல்லும் சாத்தி, பொருளாதார வசதிக்கேற்றவாறு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டும் வரலாம். இதேபோல் பர்வபக்ஷ அபரபக்ஷ ஏகாதசி விரத நாட்களிலும் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீமஹாவிஷ்ணுமூர்த்தியையும் அஞ்சனேய சுவாமியையும், சில கோயில்களில் இவர்கள் பிரதிஷ்டை செய்யப்படாதிருந்தால், பசுவுடனும் திருவாயில் வேய்ங்குழலுடனும் எழுந்தருளி இருக்கும் ஆயர்குலத்து அறவா வெண்ணெய் உண்ட கண்ணு, நீலமேக வண்ணு என்றெல்லாம் அடியார்கள் ஏற்றிப் போற்றிப் பூசிக்கும் ஸ்ரீகண்ணபிரானை அல்லது சந்தான கோபாலரை சிறிய நீல நிற சுவாமிப் பட்டு அணிவித்து வெண்ணெய் கலந்த அல்லது சர்க்கரை கலந்த சாதம் நிவேதித்து, துளசி இலை,

**ஆனைக்கோட்டையூர்**

**சின்னத்துரை நவரத்தினம்**

நீலநிறப் புஷ்பம் ஆகியனவற்ருல் அர்ச்சனைகள் செய்வித்தும், தினமும் சூரியன் உதயமாகும் போது சிவப்புநிற புஷ்பம் நிலத்தில் போட்டுவீழ்ந்து வழிபட்டும் வரலாம். இப்படியெல்லாம் "இரை தேடுவதோடு இறையும் தேடி" வழிபாடுகள் செய்துவரின் வீட்டில் செல்வம், தொழில் வளம், சந்தான விருத்தி முதலியன கைகூடும். அட்டமச் சனி காலத்தில் நடைபெறக்கூடிய பல்வேறு விதமான கஷ்டங்கள், அழிவுகள், இழப்புகள் வராமல் ஓரளவுக்கேனும் தடுத்து, தெய்வத்தின் அளப்பரிய இனிய கருணையால் மங்களகரமாய் வாழலாம். 24. 1. 1986ன் மேல் "வியாழன்" இலாபஸ்தானமாகிய 11ம் வீட்டிற்கு வருகிருர். அதிலிருந்து வியாழசுகம் இருக்கும்.

**இடப ராசி** நேயர்களுக்கு (கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை நக்ஷத்திரங்களில் பிறந்பிவர்களுக்கு) சனி பகவான் 7ம் வீடாகிய களஸ்திர ஸ்தானத்திற்கு வருகிருர். குடும்பக் கலகம், குடும்பப் பிணக்குகளால் நினைத்த காரியங்கள் நிறைவுபெருமல் இடை நடுவில் ஸ்தம்பித்தல், குடும்பப் பிரிவினைகள் போன்றன நிகழாமல்நாவை அடக்கி, கோபத்தை தணித்து, வாக்குவாதங்களில் ஈடுபடாமல் மன அடக்கத்துடன் பெரியோர்களுக்கு மதிப்பளித்து, பணிந்து இறைவன் நாமங்களை எத்தனை இலட்சங்களாயினும் ஒய்வு நேரங்களில் 'லிகித ஜெபமாக' எழுதி, தெய்வ வழிபாடுகளுடன் அமைதியாக இனிவரும் $2\frac{1}{2}$ வருஷங்களை கடத்திச் செல்லவும். இவர்களுக்கு "வியாழன்" இப்பொழுது ஒன்பதாம் வீட்டில் இருப்பதால் 24. 1. 1936 வரை பிதிர்ப் புண்ணிய விஷயங்களில், தெய்வீக யாத்திரைகளில், புண்ணிய நதிகளில் தீர்த்தமாடுதல் போன்ற ஈடுபாடுகளைக் காட்டும். அதன் பின் வியாழன் 10ம் வீட்டிற்கு வருவதால் இடப்பெயர்ச்சி, தொழில் மாற்றம் போன்றன காட்டலாம்.

**மிதுன ராசி** யினருக்கு இதுவரை 5ல் நின்ற சனி இனி 6ம் வீட்டிற்கு வரும். இதுவரை இருந்த இடியப்பச் சிக்கல் போன்ற பிரச்சினைகள், மனக்கவலைகள், நோய்கள், நெஞ்சுவருத்தங்கள் போன்றன நீங்கும்.

**கர்க்கடக ராசி** நேயர்களுக்கு (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம் நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு) இனி $2\frac{1}{2}$ வருஷகாலத்திற்கு 5ம் வீட்டில் சனி பகவான் சஞ்சாரம் செய்வார். 5ம் வீட்டை புத்திர ஸ்தானம், இருதய ஸ்தானம் என ஜோதிடர்கள் அழைப்பர். 'ஐந்தில் சனி நெஞ்சில் சனி'' என்றும் கூறுவதுண்டு நெஞ்சு வருத்தங்கள், மூச்சடைப்பு, தொய்வு, ஏக்கம், கலக்கம், சதா, பயந்த சுபாவநிலை, கர்ப்பச் சிதைவு, சத்திர சிகிச்சை போன்றன காட்டி மறையும். தெய்வ வழிபாடுகளுடன் அவதானமாய் வாழ்ந்தால் வீண் அனர்த்தங்களைத் தவிர்க்கலாம். இவர்களுக்கு 'வியாழன்' 7ம் வீட்டில் இருப்பதால் 24. 1 1986 வரை கணவன் மனைவி உறவு பெலமாய் இருக்கிறது. அதன்பின் அட்டமத்து வியாழன் ஆரம்பம்.

**சிங்க ராசி** நேயர்களுக்கு (மகம், பூரம், உத்தரத்து முதற்கால நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு) சனி மாற்றம் தீமை செய்யாது. 24. 1. 1986ல் வியாழன் மாறியபின் சுகபலன்களைச் செய்வார்

**கன்னி ராசி** நேயர்களுக்கு (உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையில் முன்னரை நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு) இதுவரை இருந்த ஏழரைச்சனி காலம் முடிவடைந்துள்ளது. இதுவரை காலமும் பட்டபல்வேறு துன்பங்கள் யாவும் நீங்கி இனி அமைதியான ஆறுதலான, சந்தோஷகரமான வாழ்க்கை நடக்கும். இந்த ராசி நேயர்களுக்கு 24. 1. 1986 வரை "வியாழன்'' 5ம் வீட்டில் இருப்பதால் இதுவரை இருந்த நெஞ்சுவலி, நெஞ்சுமுட்டு, நெஞ்செரிவு, தொய்வு, சளிக்குணம் போன்றன நீங்கும். இவர்கட்கு இதுவரையில் புத்திர பாக்கியம் காட்டியிருக்க வேண்டும், இதுவரையில் இல்லாதவர்களுக்கு இனிமேல் சந்தானவிருத்தி ஏற்பட இடமுண்டு. இது இன்னும் 4 – 5 மாதங்களுக்குள் கைகூடலாம். ஏகாதசி விரத நாட்களில் சந்தான கோபாலரை வழிபட்டு வருக.

**துலா ராசி** நேயர்களுக்கு (சித்திரையிற் பின்வரை சுவாதி, விசாகத்து முன்முக்கால் நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு) இனி ஏழரைச் சனி கடைக் கூற்றுக்கால்ம்.

—5ஆம் பக்கம் பார்க்க

★ ரஷ்யா தெரிவித்த யோசனை ஏற்கப்பட்டது

# அணுவாயுதங்களின் சில ரகங்கள்; பாதியாக குறைக்க அமெ. இணக்கம்!

(வாஷிங்டன்)

அணுவாயுதங்களின் சிலவகைகளை ஐம்பது வீதமாகக் குறைத்துக் கொள்வதற்கு சோவியத் யூனியன் தெரிவித்த யோசனையை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளத் தயார் என்று ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகன் வாஷிங்டனில் முதல் முறையாக அறிவித்துள்ளார். தனது வாராந்த வானொலி உரையிலேயே அவர் இதனை அறிவித்தார்.



இருதரப்பினரும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் தயாரிப்பதைக் குறைப்பதற்கு அமெரிக்கா மூன்று வருடங்களுக்கு முன்னரே யோசனை தெரிவித்திருந்தது என்று திரு. றீகன் இவ்வுரையின் போது குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் ஜெனீவாவில் தனக்கும் சோவியத் தலைவர் திரு. கொர்பசெவ்வுக்கும் இடையே நடைபெறவுள்ள உச்சி மாநாடு பயனளிக்கும் என்ற தன் நம்பிக்கையையும் அவர் வெளியிட்டார்.

ராஜ்யத்துறை முயற்சிகளுக்கு அது உற்சாகம் ஊட்டும் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பாரதூரமான அழிவுகளை உண்டாக்கும் ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடுகளையும் இது விடயத்தில் பெரும் பொறுப்பு சார்ந்துள்ளது என்றும் திரு. றீகன் கூறினார்.

## நாடளாவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு பங்களாதேஷ் கூட்டணி ஏற்பாடு

(டாக்கா)

நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப் போவதாகப் பங்களாதேஷ் எதிர்க்கட்சிக் கூட்டணி அறிவித்துள்ளது. இக் கூட்டணியில் பதினைந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

தற்போதைய இராணுவ அரசாங்கம் நாட்டை ஓர் உள்நாட்டுப் போருக்கு உரிய நிலைக்கு இட்டுச் செல்கிறது என்று இக்கூட்டணி குற்றஞ் சாட்டியுள்ளது.

பங்களாதேஷ் தெருக்களில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என்று கூட்டணி தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மீதான

## தென்னுபிரிக்க அரசு நடவடிக்கைக்கு பரவலாகப் பலத்த கண்டனம் தெரிவிப்பு

(ஜொஹனஸ்பேக்)

கலவரங்கள் நிகழும் தென்னுபிரிக்காவில் செய்திகளை வெளியிடும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மீது தடை ஏற்படுத்த முற்பட்டுள்ள தென்னுபிரிக்க பிரிட்டோரிய அரசின் செயலுக்குப் பரவலாகக் கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜொஹனஸ்பேக்கில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கம் இதனைக் கடுமையாகச் சாடியுள்ளது.

உட்பூசல்களைவெளியுலகிற்கு வெளிப்படுத்தாதிருக்க உருவாக்கப்படுகிறது இத்தணிக்கை முறை என்று இச்சங்கம் கூறியுள்ளது.

அரசு கட்டுப்பாட்டை இழந்து விட்டது என்பதையே இது காட்டுகிறது என்று சிறை வைக்கப்பட்டுள்ள நெல்சன் மண்டலேயின் மனைவி வினி மண்டலே தெரிவித்துள்ளார்.

பாக். ஜனதிபதி எகிப்து விஜயம்:

## இருதரப்பு உறவு: உலகநிலை; ஆராயப்படும் என அறிவிப்பு

(கெய்ரோ)

பாகிஸ்தான் ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு எகிப்து வந்துள்ளார்.

அவர் ஜனதிபதி முபாரக்குடன் இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிப்பார்.

பாகிஸ்தான் அதிபர் ஒருவர் எகிப்துக்கு இருபது வருடங்களின் பின் உத்தியோகபூர்வமாக விஜயம் செய்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கேரியாவில் பாரத துணைஜனதிபதி

## ஆசிய மற்றும் பொது நிலை; பரஸ்பரம் ஆராயப்பட்டது

(ஸோபியா)

பாரதத் துணை ஜனதிபதி திரு.ஆர். வெங்கட்ராமன் பல்கேரியாவில் துணை ஜனதிபதி திரு. தான்ஸேயைச் சந்தித்து உரையாடினர்.

ஆசிய விவகாரம் மற்றும் உலக நிலைவரம் என்பன குறித்து அவ்வேளை ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக சமாதானத்துக்கு அணிசேரா நாடுகள் ஆற்றி வரும் பங்களிப்புகுறித்து திரு. வெங்கட்ராமன் விபரித்தார்.

இவ் விடயத்தில் பாரதம் ஆற்றிவரும் பணியைப் பல்கேரியத் துணை ஜனதிபதி வெகுவாகப் பாராட்டினர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதில் பாரதம் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும் என்று திரு. வெங்கட்ராமன் தெரிவித்தார்.

வெளியுறவுச் செயலர் பண்டாரியிடம்

## தமிழர் நிலை; இராமச்சந்திரன் தலைநகரில் நேரில் விபரிப்பார்

(சென்னை)

தமிழ்நாடுமின்துறைஅமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் புதுடில்லியில் வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான அடிப்படைச் செயல் திட்ட நகல் பற்றிய தமிழர் நிலையை எடுத்துரைக்கவுள்ளார்.

அவர் மூன்று தினங்களாக தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும், ஈழம் தேசிய விடுதலை முன்னணியினரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருந்தார்.

மேற்படி நகல் திட்டத்தைத் தாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று சகல தமிழர் அமைப்புகளும் அவரிடம் தெளிவுபடுத்தின.

புதுடில்லியில் நடைபெறும் மின்துறை அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொடளும் பொருட்டு திரு. இராமச்சந்திரன் அங்கு சென்றுள்ளார்.

(4ஆம் பக்கத் தொடர்)

ஏழாரைச்சனி முடிய இன்னும் 2½ வருஷமளவில் இருக்கிறது. 'சனியனைப் போல் கெடுப்பாருமில்லை. சனியனைப் போல் கொடுப்பாருமில்லை', என்பது ஜோதிடப் பழமொழி. ஆகையினுல் இனி வரும் 2½ வருஷகாலத்துக்குள் நல்ல காரியங்கள் நடைபெறவும் இடமுண்டு. 24.1. 1986 ன் மேல் ''குரு'' (அதாவது வியாழ பகவான்) 5ம் வீட்டிற்கு வரும்போது மன மகிழ்ச்சியான ம்பவங்களும் நடைபெறலாம். எனினும் இனிவரும் 2½ வருஷத்தையும் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் மேடராசி நேயர்களுக்குக் குறிப்பிட்டதுபோல் தெய்வ வழிபாடுகள், லிகித ஜெபம் (அதாவது தத்தமக்கு இஷ்டமான தெய்வத்தின்நாமத்தை) பக்தியோடு இயன்றளவு எத்தனை இலட்சம் தடவை யென்ருலும் எழுதிவருக. அவப்பொழுதையும் தவப்பொழுதாகவே கழித்துவருதல் இறுதியில் பலவித நன்மைகளை நிச்சயம் நல்கும்.

**விருச்சிக ராசி** நேயர்களுக்கு (விசாகத்து நலாங்கால், அனுஷம், கேட்டை நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு) இனி சனி பகவான் 2½ வருஷங்கட்கு இதே ராசியிலேயே சஞ்சாரம் செய்யப் போகிருர். இதோடு வியாழனும் தற்போது 3ம் வீட்டில் சஞ்சாரம் செய்யும் காலமாதலால் இதனை துரியோதனனுக்குத் தலைபோன காலம் என்பர் ஜோதிடர்கள். எல்லா வழியாலும் வீண் பிரச்சனைகள், குறை குற்றம் கேட்டல் அவசியமற்ற அலைச்சல்கள், செலவுகள், ஏமாற்றங்கள், மரணபயம், வியாச்சியம், கால் கை விபத்தால் உடைதல், கை கால் உளைச்சல், நெஞ்சு வருத்தங்கள், இன சனவிரோதம், குடும்பக் கலகம், பிரிவு போன்றன காட்டும். இக்கட்டுரையின் ஆரம்பத்தில் மேடராசி நேயர்களுக்கு பரிந்துரை செய்தபடி விரத அனுஷ்டானங்கள், வழிபாடுகள் போன்றன செய்து தேவையற்ற விஷயங்கள், கூடாத கூட்டங்கள் நாட்டங்கள், தீய பழக்க வழக்கங்கள் போன்றனவற்றை கைவிட்டும், நீங்கியும், ஒதுங்கியும் சில காலம் அமைதியாக வாழ்ந்துவரவும். 24.1. 1986ன் மேல் வியாழபகவான் 4ம் வீட்டிற்கு வரும் போது ஓரளவு வியாழ சுகம் காட்டும். வியாழக்கிழமைகளில் தென்முகக் கடவுளாம் தட்சணுமூர்த்திக்கு மஞ்சள் நிற சுவாமிப் பட்டு வாங்கிச் சாத்தி, மஞ்சள் நிறப் புஷ்பத்தால் அர்ச்சனை செய் துவருக. இடுப்பில் அல்லது கையில் கோயிலில் பூசையில் மந்திரித்து வைத்த மஞ்சள் நூல் அணியவும். இலேசான மஞ்சள்நிறமுள்ள அல்லது மஞ்சள் கரையுள்ள ஆடைகள் அணிவதும், தங்க ஆபரணங்கள் அணிவதும் மனதிற்கு அமைதி, ஆறுதல் தரும்.

**தனு ராசி** நேயர்களுக்கு (மூலம்பூராடம்,உத்தராடத்து முதற்கால் நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு) இனி ஏழரைச் சனி காலம் ஆரம்பம். 'அட்டமச்சனி பெட்டகத்தில் துணி இருக்கவிடாது'. 'அட்டமத்து வியாழன் பட்டம் இழக்கச் செய்யும்' 'பத்தில் வியாழன் பதியை (வீட்டை) விட்டுக் கிளப்பும்' என்பதெல்லாம் ஜோதிட உண்மைகள். ''வெள்ளம் வருமுன் அணை கட்டவேண்டும்'' என்பது போல எந்த எந்தக் கிரகங்களால் என்ன என்ன விதமான கஷ்ட நஷ்டங்கள், பாதிப்புகள் வருமென்று அறிந்துகொண்டால் அதற்கேற்றவாறு அத்தகைய தொந்தரவுகள், கிரக கோளாறுகள் போன்றனவற்றிலிருந்து நீங்கி வாழ, உரிய உரிய காலத்தில், உரிய உரிய கிரகங்கள், தெய்வங்கட்கு பூசைகள், அர்ச்சனைகள், அபிஷேகங்கள், ஆராதனைகள், தானதருமங்கள் கட்டாயம் செய்யவேண்மென்று கண்டால் அப்படிச் செய்தல் நன்மை பயக்கும். பதினறு வயது பூர்த்தியானவுடன் மார்க்கண்டேயனை காலன் பிடிக்க வந்தான். அவர் பூரண நம்பிக்கையுடன் சிவலிங்கத்தை அணைத்தார். உடனே ஞாலம் போற்றும் தூய வெண்ணீறும் பிறையும் அணிந்த நஞ்சுண்ட கண்டனுகிய சிவபெருமான் தன் காலால் காலனை (யமனை) உதைத்து, தமக்குத் தினமும் பக்தியோடு சிவபூபை செய்து வந்த மார்க்கண்டேயருக்கு அபயமளித்தார்.

மகரராசி நேயர்களுக்குத் உ) தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு) இப்பொழுது வியாழபகவான் ஜென்ம ராசியில் நிற்பதால் 24.1. 1986 வரை வியாழக்கிழமைகளில் விரதமிருந்து சிவன் அல்லது தட்சணுமூர்த்திக்கு மஞ்சள்நிறப்புஷ்பத்தால் அர்ச்சனை செய்வித்து வருக. 24.1. 1986ன் மேல் வியாழன் 2ம் வீட்டிற்கு வரும்பொழுது நற்பலன்களைச் செய்வார். இப்பொழுது ஏற்படும் சனி மாற்றம் தீயன செய்யாது.

கும்பராசி நேயர்களுக்கு (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களு கு) சனி மாற்றம் தீமை செய்யாது. 24 1.1986ல் மேல் வியாழ பகவான் ஜென்ம ராசிக்கு வரும். வீண் வாக்குவாதங்கள், சண்டை சச்சரவுகள் போன்றவற்றைத் தவிர்த்து வியாழக்கிழமைகளில் விரதமிருந்து சிவன் அல்லது தட்சணுமூர்த்திக்கு மஞ்சள் நிற புஷ்பத்தால் அர்ச்சனை செய்வித்து வழிபாடு செய்து வருக.

மீனராசி நேயர்களுக்கு(பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி, ரேவதிநக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு) கடந்த 2½ வருஷகாலமாக அட்டமத்துச் சனியனுல் பட்ட சொல்லொணுத பல பலதுயரங்கள் இன்று நிகழும் சனி மாற்றத்துடன் நீங்குகிறது. பலத்த அடைமழைக்குப் பின் வானத்தில் சூரிய பகவானின் வெளிச்சம் தோன்றுவதுபோல் இவர்கள் வாழ்வில் இதுவரை சூழ்ந்திருந்த இருள், பீடைகள் முதலியன நீங்கி, விடிவெள்ளி உதயமாகி ஒளிவீசும். இனிமேல் பயம், கலக்கம், ஏக்கம், மரண பயம் போன்றன. ஏற்பட இடமிராது. சிரித்து வாழ்க. இந்த ராசி நேயர்களுக்கு இப்பொழுது வியாழ பகவான் இலாபஸ்தானம் ஆகிய 11ம் வீட்டில் இருப்பதால் 24.1.1986க்கிடையில் இவர்களுக்கு அல்லது இவர்களின் நற்பலன்களால் இவர்கள் வீட்டில் வசிப்போருக்கேனும் சுபகாரியங்கள் நடைபெறலாம். ''தும்பிக்கையானை நம்பிக்கையோடு நன்றியுணர்வோடு ஏற்றிப் போற்றி வழிபட்டு மங்களமாய் வாழ்க.'' பொதுவாக எல்லோருக்கும் இக்காலத்தில் பிதிர்புண்ணிய காரியங்களில் ஈடுபடுதல், தீர்த்தயாத்திரைகள் செய்தல், விரதநாட்களில் வீட்டில் கோமாதா பூசை (பசு வழிபாடு) செய்தல், திருவிளக்குப் பூசை செய்தல், போன்றன எல்லாவிதமான செல்வவிருத்திகளையும், இலட்சுமிகரான வாழ்க்கையையும் நல்கும்.

ஈழமுரசு

## நான்கு கிரிக்கெட் போட்டியிலும் இலங்கைக்குப் படுதோல்வி!

பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இலங்கைக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் கடந்த இருவாரங்களாக நடை பற்ற மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகள் நான்கிலும் இலங்கை பாகிஸ்தானிடம் படுதோல்வியடைந்தது. நான்காவதும் கடைசியுமான மட்டுப்படுத்தப்பட்ட போட்டி நேற்று நடைபெற்றது. பாகிஸ்தான் கோஷ்டி 39 ஓவர்களில் 216 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கைகோஷ்டி 37 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 127 ஓட்டங்களை மட்டும்பெற்றது இலங்கைக் குழுவைச் சேர்ந்த ரஞ்சன் மடுகல்ல பார்வையாளரின் கல்வீச்சுக்கு இலக்கானதும் குறிப்பிடத்தக்கது.

தனியார் மருத்துவக் கல்லூரியின் ஏற்பாட்டில்

# மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் இன்றிருந்து மீண்டும் கிளினிக்; 15ம் திகதி ஆய்வுகூட அடிக்கல்

வட இலங்கைத் தனியார் மருந்துவக் கல்லூரியின் உபயோகத்துக்காகப் பயன்படுத்தப்படவுள்ள மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் இன்று முதல் 'கிளினிக்' வேலைகள் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியின் தலைசிறந்த வைத்திய நிபுணர்கள் தினசரி இங்கு கடமையாற்ற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மருத்துவக் கல்லூரி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பல்துறை வைத்திய நிபுணர்களும் இங்குபணியாற்றி நோயாளிகளைப் பார்வையிடுவர்.

அதேவேளையில் வைத்தியக் கல்லூரி மாணவர்களின் தேவைக்கான ஆய்வுகூடமொன்றை இங்கு அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான அத்திபாரக்கல் நாட்டு விழா இம்மாதம் 15ம் திகதி நடைபெறவுள்ளது.

## சகல மாணவர்களும் சகல துறைகளிலும் அறிவு பெற கொத்தணி முறை சிறந்தது

### யாழ். கல்விப் பணிப்பாளர் கருத்து

(பண்டத்தரிப்பு)

வட்டாரக்கல்வி அதிகாரி பிரிவுப் பாடசாலைகள், வலயங்களாகப் பிரிக்கப்பட்டு, வலயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கொத்தணிப் பாடசாலை அமைப்புகளாக்கப் படுவது இலவசக் கல்வி, இலவசபாடப்புத்தகம் என்பனவற்றுடன் சேர்த்து, மேம்பாடான சிறந்த கல்வியை சகல மாணவருமபெற வழிவகுக்கின்றது.

இவ்வாறுவடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை, நான்கு வலயங்களாகப்பட்ட வட்டுக்கோட்டை கல்வி வட்டாரவலயத்தில் ஒன்றான வட்டுக்கோட்டை வலய பாடசாலைகள் பதினைந்தையும், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி அதிபரின் கீழ் வட்டுக்கோட்டை கொத்தணிப்பாடசாலையாகத் தொடக்கிவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா தலைமையில் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது. மேற்படி கொத்தணிப் பாடசாலையினுள் சேரும் 15 பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்ட இவ்வைபவத்தில திரு. சிமியாம்பிள்ளை தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது.

கொத்தணி பாடசாலை அமைப்பு முறையும், செயற்பாடும் இன்று நடைமுறையிலிருந்துவரும் பாடசாலைக்குறைபாடுகளை நிவர்த்தி பண்ணும் வகையில் செயற்பட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய அமைப்பு முறையில் விஞ்ஞான விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் இல்லாத பாடசாலை மாணவ மாணவியரும், சிறந்த விஞ்ஞான ஆசிரியரின் சேவையைபபெற வாய்ப்பளிக்கின்றது. கொத்தணி அதிபர் உள்ள வளத்தை அனைவரது மேம்பாட்டிற்காகவும் பயன்படும் மார்க்கத்தை வகுத்துக்கொள்வார்.

கொத்தணிப் பாடசாலை அமைப்பிலுள்ள மேல் நிலைப் பள்ளி ஒன்றிலுள்ள விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வுகூட வசதிகளை, ஆய்வு கூட வாய்ப்பில்லாத பாடசாலை ஒன்றின் மாணவர் அங்கு சென்று செய்கை முறை அனுபவ அறிவைப் பெற வழியமைக்கபபடுகின்றது. எனவேதான் கல்விச் சாதனங்களின் பயன் பாட்டை பூரணமாக அனுபவிக்க கொத்தணிப்பாடசாலை முறை உதவும் என திண்ணமாக எண்ணுகின்றோம் என்றார்.

ஒவ்வொரு துறையிலும் விசேட தகமை, அறிவு ஆற்றல் பெற்ற ஆசிரியர் சேவையை எல்லா மாணவரும் பெற இவ்வமைப்பு முறை வழிவகுக்கின்றது. என்றார்.

கொத்தணிப்பாடசாலை அமுலாக்கல், நடைமுறைச் செயற்பாட்டு ஆலோசனைகட்கு பொறுப்பான பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி உரையாற்றுகையில் அருமையான இந்த முறை வெற்றி பெற அதிபர் ஆசிரியர் கொத்தணி அதிபர் ஆகியோரின் விவேகமான செயற்பாடு, ஒத்துழைப்பு. மேற்பார்வை, வழி நடத்தல் என்பவற்றிலேயே தங்கியுள்ளது என்றார்.

வைபவத்திற்கு தலைமை தாங்கிய திரு. ப. சண்முகராசா கொத்தணிப் பாடசாலை அதிபர் என். வேலுப்பிள்ளையின் சிறந்த இயல்புகளும் ஆசிரியர்களை அணைத்து நல்ல இனிய சுபாவத்துடன்பழகி தன் எண்ணத்தை நிறைவேற வைக்கும் திறமையால் இக்கொத்தணிப் பாடசாலை முறைமையால் மாணவர் கல்வி சிறக்கும் என என்னை எண்ண வைக்கிறது. என்றார்.

## இன்டர்சிற்றி ஒருமணி பிந்தி புறப்பட்டது

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் இன்டர்சிற்றி ரயில் நேற்று மாலை 4-30 மணிக்கே யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரவேண்டிய யாழ்தேவி நேரம்பிந்தி வந்ததே இதற்குக் காரணமாகும். இன்டர்சிற்றி ரயில் பிற்பகல் 2 40 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படவேண்டியது குறிப்பிடத்தக்கது.

### ராஜீவும்....

வார இறுதியில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாமெனவும். அதற்கு முன்னர் கொழும்பிலுள்ள பாரதத் தூதுவர் திரு டிக்ஸிற் டில்லிக்கு அழைக்கப்படலாமெனவும் தெரியவந்துள்ளது.

டில்லிப் பேச்சுவார்த்தைகள் இவ்வாரம் ஆரம்பமாகலாமென ஈழம் தேசிய விடுதலை முன்னணிப் பேச்சாளர் ஒருவர் சென்னையில் நேற்று முன்தினம் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

### சம்பவ....

நீதி திரு. ஐ. பி. பொன்சேகா யாழ்ப்பாணத்தில் நடைபெறும் விசாரணை அமர்வுகளுக்குத் தலைமை தாங்கலாமென தெரிய வந்துள்ளது.

இராணுவ தாக்குதல்கள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களையும் குழுவினர் நேரில்சென்று பார்வையிடுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### அம்புலன்ஸ்....

கள் ஏதும் அற்ற ஏறத்தாழ இருபத்தைந்து கிராமங்களைச் சேர்ந்த மக்களிற்குச் சேவையாற்றி வந்த மல்லாவி அரசினர் வைத்தியசாலையின் 'அம்புலன்ஸ்' வண்டி மருந்து வகைகளுடன் கடத்தப்பட்டமை இப்பகுதி மக்களிற்கு மிகுந்த சிரமத்தை அளிக்குமென தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நோயாளர்கள் எதிர்காலத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாண வைத்தியசாலைகளுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்றும், இம் மக்களின் துயர் துடைத்திடும் வகையில் வாகனத்தையும், மருந்து வகைகளையும் ஒப்படைக்குமாறு வைத்தியசாலை நலன் புரிச் சங்கத்தினர் அறிக்கை விடுத்துள்ளனர்.

### மாவைக்....

கும்பகோணம் கற்பக விலாஸ் முத்தையா செட்டியார் கண்காணிப்பில் பல சிற்பிகளது மேற்பார்வையில் திருவீழிமிழலையில் உருவகம் செய்யப்பட்ட இவ் அசையாமணி சென்ற வாரம் இந்தியாவிலிருந்து விமானம் மூலம் கொழும்பு வந்து அங்கிருந்து மாவிட்டபுரம் கொண்டுவரப்பட்டுள்ளது.

மணிக்கோபுர வேலையும் இரவு பகலாக நடைபெற்று வருகின்றது. இந்த அசையா மணியையும், மணிக்கோபுரத்தையும் மாவிட்டபுரம் வயிரவப்பிள்ளையின் மகனன தற்போது மலேஷியாவில் வசிக்கும் பாலகிருஷ்ணன் தனது புண்ணிய உபயமாக உபகரித்துள்ளார்.

## சரக்கு ரயில் யாழ். வந்தது

யாழ்ப்பாணத்துக்கு பத்து நாள் இடைவேளையின் பின்னர் நேற்று சரக்குரயில் வந்தது. இரண்டு வகனில் சீனியும் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களும் கொண்டுவரப்பட்டன

## இது சாரதியின் வேலையல்ல; ஆனாலும் அவரே செய்தார்

(நல்லூர்)

யாழ். புகையிரத நிலையத்திலிருந்து பளையை நோக்கி வெள்ளிக்கிழமை மாலை சென்ற சரக்கு ரயில் கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள புகையிரதக் கடவைக்கான கேற் மூடப்படாமல் இருந்ததால் சிறிது நேரம் தாமதித்து; புகையிரதத்தின் சாரதி புகையிரதத்தை நிறுத்திவிட்டு கீழே இறங்கி வந்து புகையிரதக் கடவைக் கேற்றை தானே மூடிய பின்னர் மெதுவாக புகையிரதத்தை ஓட்டிச் சென்றார்.

அப்பாதையால் வந்த ஒருவர் புகையிரதம் சென்ற பின்னர் அந்தக் கடவைக் கேற்றுகளைத் திறந்துவிட்டார். அந்தக் கடவையை மூடுவதற்கான ஊழியர் ஒருவர் இருந்தும் அது மூடப்படாமல் விட்டமை குறித்து பலர் ஆச்சரியப்பட்டதுடன், புகையிரதத்தை ஓட்டிவந்த அதன் சாரதியின் மனப்போக்கைப் பாராட்டிப் பேசினர்.

## யாழ். இந்து சாரணர்களுக்கு அதிபரின் தேநீர் விருந்து

1985 ஆம் ஆண்டு சாரணர் பாசறை வாசப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி ஐந்து வெற்றிக் கேடயங்களைச் சுவீகரித்துக்கொண்டதை பாராட்டுமுகமாக அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் சாரணர்களுக்கான தேநீர் விருந்து வைபவம் ஒன்றை நடத்தினார்

இவ்வைபவத்தில் அதிபர் உரையாற்றுகையில், சாரணீய நடவடிக்கையில் கடந்த பதினொரு வருட காலமாக முதலிடத்தைப் பெற்று சாரணீய நடவடிக்கைகளில் பழுத்துப் போன சாரணர் குழுவிற்கான தேநீர் விருந்து வைபவத்திற்கு தலைமை தாங்குவதில் பெருமகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

சாரணர் குழுத் தலைவர் திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராசா உரையாற்றுகையில் சாரணீயத்தின் மகத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளான பாசறை அமைப்பு, மைதானக் காட்சி, அணிநடை, பதிவேடுகள் ஆகிய போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றுள்ளோம் என்றார்.

உதவி மாவட்ட ஆணையாளர் திரு. நா. நல்லையா எல்லாப் போட்டிகளிலும் பங்கு கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உரையாற்றினார்,

உப அதிபர் திரு. சி. முத்துக்குமாரசுவாமி நல்லூர் கோவிலில் சமூக சேவை செய்தமைக்காக கேடயம் பெற்றவர்களின் தொண்டினைப் புகழ்ந்து சான்றிதழ் வழங்கினார். செல்வன் டொமினிக் ரவீந்திரராசா நன்றியுரை நிகழ்த்தினார்.

### இந்தியாவுள் ...

வித்துள்ளது.

உள்நாட்டில் கலகத்தை உண்டு பண்ணும் சீக்கியத் தீவிரவாதிகளுடன், கைதான பாகிஸ்தானியர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்ததாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

### மக்கள் ...

முதல் மீண்டும் ஆரம்பமாக விருந்த மறியல் போராட்டம் மூன்று வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## மது போதை தடுப்பு மாநாடு

அரபு கிழக்கு நாடுகளின் மது போதைவஸ்து கடத்தல் தடுப்புச் சட்ட அமுல் படுத்தும் ஸ்தாபனத்தின் சர்வதேச மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது. ஐந்து தினங்களுக்கு இம் மாநாடு நடைபெறும்.

## மழைக்குளிர் லைன் - அவுட்

கடந்த சில தினங்களாக அடிக்கடி பழுதடைந்து வந்த யாழ் — கொழும்பு தொலைபேசித் தொடர்பு. நேற்று முற்பகல் முதல் நிரந்தரமாக 'அவுட்' ஆகிவிட்டது. இதனால் நேற்று முழுவதும் யாழ்ப்பாணத்துடனான சகல வெளி மாவட்ட தொலைபேசிச் சேவைகளும் துண்டிக்கப்பட்டிருந்தன.

## பெற்றோல் போத்தல் 15 ரூபா

யாழ்ப்பாணத்தில் நேற்று பெற்றோல் ஒரு போத்தல் பதினைந்து ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. கடந்த சில வாரங்களாக இங்குபெற்றோல் ஒரு போத்தல் பதினெட்டு ரூபா முதல் இருபது ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது.

## யப்பானில் பிரதமர்

பிரதமர் பிரேமதாஸா ஐக்கியநாடுகள் சபைக் கூட்டத்திலிருந்து நாடுதிரும்பும் வழியில் நேற்று யப்பானுக்குச் சென்றார். இங்குள்ள பல வீடமைப்புத் திட்டங்களையும் அவர் நேரில்சென்று பார்வையிட்டார்.

### யாழ் நகரில்...

ரோந்து சுற்றிக் கொண்டிருந்த வேளையில். ஆங்காங்கே குண்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணமிருந்தது.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 04-11-1985 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336